<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

Calender : CC No.505/2025
Miscellaneous :
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : P.W.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஜயகுமார் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : பேச்சிமுத்து | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலுக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 13.11.2025.

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் உடுமலைப்பேட்டையில் வாணி நகர மருள்பட்டி ரோட்டில் வசித்து வருகிறேன். ரியல் எஸ்டேட் வேலை செய்து வருகிறேன். என்கு ஒரு மகன்உள்ளார். அவர் பெயர் வினோத்கண்ணன். அவர் சென்னையில் பணிபுரிந்து வருகிறார் நானும் எனது மனைவியும தான் வீட்டில் உள்ளோம் கடந்த 02.11.2024 ம் தேதி காலையில் வேலைநிமித்தமாக நான் வெளியில் சென்று விட்டேன். பின்னர் 07.11.2024 ம் தேதியன்று எனது அண்ணன் மகனுக்கு திருமணம் நடைபெறுவதால் அது சம்பந்தமாக முகூர்த்த கால் நடுவதற்காக 1.45 மணிக்கு வீட்டை பூட்டியும் கேட்டையும் பூட்டியும் அண்ணன் வீடான வாய்க்கால்பாலம் கணேசபுரத்திற்கு சென்று விட்டார்கள். நான் 3.15-3.30 மணிக்கு நான் மட்டும் வீட்டிற்கு வந்தேன். கேட்டை திறந்து வீட்டிற்கு வந்த போது எனது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு லேசாக திறந்து நிலையில் இருந்தது. வீட்டிற்குள் சென்று போய் பார்த்த போது பெட்ரூம் கதவு திறந்து கிடந்தது. வாட்ரோப் மற்றும் பீரோ உடைக்கப்பட்டு திறந்து கிடந்தது. இரும்பு பீரோவும் திறந்து கிடந்தது. அதிலிருந்த லாக்கரும் திறந்து கிடந்தது.

துணிகளும் சிதறி கிடந்தது.

2. பின்னர் வாட்ரோப் பீரோவில் டிராவில் வைத்திருந்த 6 பவுன் முறுக்கு செயின் –1, தங்க நெக்லஸ் – 4 பவுன்–1, 4 பவுன் ஆரம்–1, 1 ¼ பவுன் பிரேஸ்லெட் –1, 1 ½ பவுன் அளவுள்ள கம்மல் – 2 ஜோடி, மூக்குத்தி அல்லகாது கம்மல் மோதிரம் போன்ற சிறு சிறு நகைகள் 1 ½ பவுன், மொத்தம் 18 ¼ பவுன் தங்க நகைகள் திருடு போயிருந்தது.தேடிப்பார்த்தும் கிடைக்கவிலலை. யாரோ உடைத்து திருடியதாக தெரிந்து கொண்டு அன்றைய தினமே காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் நான் எழுதியது தான். அதிலுள்ள விவரம் தெரியும். புகார் அசா.ஆ .1 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் வந்து விசாரித்தார்கள். திருடு போன நகைகளின் மதிப்பு ரூபாய் 1 லட்சம் ஆகும். திருடு போன நகைகளில் 4 பவுன் நகைகள் தான் மீட்கப்பட்டதாகவும் திருடியவர்களை பிடித்ததாகவும் போலிசார் சொன்னார்கள். நான் காவல் நிலையம் சென்று நகைகளை அடையாளம் காட்டினேன். எதிரியை போலிசார் அடையாளம் காட்டினார்கள். நான் எதிரி சிங்காரவேலிடம் நான் பேசிய போது அவர் தான் நகைகளை திருடியதாக கூறினார். 4 பவுன் நகைகளை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்று கொண்டேன். என்னிடம் காட்டப்படும புகைப்படத்தில் உள்ள தங்க ஆரம் நகை தான் நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்று கொண்ட நகையாகும். தங்க ஆரத்தின் புகைப்படம் அசா.ஆ .2 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள். மீதி நகைகளை மற்ற எதிரிகளை கைது செய்து மீட்டு தருவதாக போலிசார் கூறினார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை (amicus curie)**</u>

1. சம்பவநம் நடந்த தேதி என்றால் 02.11.2024. 07.11.2024 ம் தேதி அண்ணன் மகன் திருமணம் என்பதை நிருபிக்கும் வகையில் திருமணம் பத்திரிக்கை போலிசாரிடம் தாக்கல் செய்திர்கள் என்றா இ்லை தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். 18 ¼ பவுன் நகைகள் காணாமல் போனதாக சொல்லியயுள்ள நிலையில்அதன் ரசீது தாக்கல் செய்துள்ளிர்களா என்றால் இல்லை. நகைகளின் டிசைன்கள் சொல்லவில்லை என்றால் அது பற்றி சொல்லவில்லை.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவது மததியம் என்றாலும் புகார் கொடுத்தது இரவு என்றாலும் சம்பவம் நடந்த உடன் 100 க்கு போன் செய்து பின்னிட்டு காவல் நிலயம் சென்று புகார் கொடுத்தோம். புகாரில் 100 க்கு போன் செய்ததாக சொல்லவில்லை என்றால்

ஆமாம். 100 க்கு உங்கள் அண்ணன் மகன் தான் போன் செய்தார் என்றாலும் உங்கள் அண்ணன் மகன் சொல்லி தான் புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் நான் காவல் நிலையம் செல்வதற்கு முன் 100 க்கு போன் செய்து விட்டு பின் நான் பதட்டமாக இருந்ததாலும் என் அண்ணனுடன் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அவர்கள் சொல்லி தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை.

3. காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு சென்றிர்கள் என்றால் 7.30 மணி இருக்கும் திரும்பி வரும் போது 9.30 மணி இருக்கும். சுமார் 3.00 மணிநேரம் அங்கிருந்திர்கள் என்றால் ஆமாம். ரத்தினம் சிவராஜ் பொன்னுதாயி ஆகியோர் உங்கள் உறவினர்கள் என்றால் ஆமாம். உங்கள் வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் உள்ள துாரம் எவ்வளவு என்றால் 3 கிமீ. எங்கு குடியிருந்து வருகிறிர்கள் என்றால் பெரியகோட்டை வாணி நகர். அங்கு மக்கள் நடமாட்டம் அதிகம் என்றாலும் போக்குவரத்து மிகுந்த பகுதி என்றாலும் ஆமாம். போலிசார் உங்கள் வீட்டில் வந்து உடைந்தபொருட்களை எடுதது சென்றார்கள் என்றால் ஆமாம் .
4. போலிசார் அதன் பின்னிட்டு எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காலை 10.00–11.00 மணி இருக்கும் . யார் விசாரித்தார்கள் என்றால் கிருஷ்ணமூர்த்தி சார் விசாரித்தார். எவ்வளவு நேரம் விசாரித்தார்கள் என்றால் ¼ மணி நேரம் . புகார் கொடுக்க யார் உடன் வந்தார்கள என்றால் எனது அண்ணன் ராதாகிருஷ்ணன். பெரிய கோட்டையில் சிசிடிவி கேமரா உள்ளதா என்றாலும உங்கள் வீட்டில் சிசிடிவி கேமரா உள்ளதா என்றாலும் எங்கள் வீட்டில் இல்லை, 100 மீ தொலைவில் உள்ளது அதை போலிசார் பார்த்தார்கள்.
5. உங்கள் வீட்டிலிருந்து காவல நிலையம் செல்ல எவ்வளவு நேரம் ஆகும என்றால் சுமார் 20 நிமிடம் ஆகும். வீடு உடைந்தது பற்றி எப்போது பார்த்திர்கள் என்றால் 3.00–3.15 மணி இருக்கும். எத்தனை மணிக்க காவல்நிலையத்தில் புகார் கொடுத்திர்கள் என்றால் 4.15 மணிக்கு. உங்கள் அண்ணன் வீட்டிற்கு செல்ல எவ்வளவு நேரம் ஆகும என்றால் நடந்து சென்றால் 20 நிமிடம் ஆகும். தகவல் சொன்னது பின்னிட்டு போலிசார் எவ்வளவு நேரத்தில் வந்தார்க் என்றால் சுமார் 30 நிமிடத்தில் வந்தார்கள். அரை மணி நேரம் வந்து பின்னிட்டு போலிசார் சுமார் 3 மணிநேரம் உங்களுடன் இருந்தார்கள் என்றால் ஆமாம் சுமார் 20 போலிசார் வந்தார்கள் பின்னர் அவர்களுடன் காவல் நிலயம் சென்று புகார் கொடுத்தேன். எவ்வளவு நேரம் காவல் நிலையத்தில் இருந்திர்கள் என்றால் சுமார் 3.00 மணி

நேரம் இருந்தேன்.

6. சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அப்படி நடந்திருந்தால் அங்குள்ள சிசிடிவி கேமரா பதிவுகள் மற்றும் நகைகக்கான ரசீது புகைப்படம் அனைத்தும் காவல்நிலையத்தில் தாக்கல் செய்திருபபிர்கள் எனறாலும் நடக்காததால் தான் மேற்படி அனைத்தையும் தரவில்லை என்றாலும் அதே போல் திருமண பத்திரிக்கையும் தாக்கல் செய்திருப்பிர்கள் என்றாலும் எதிரிகளுக்கும இந்த வழககிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியலல். சம்பவ நடநத்தாக சொல்லப்படும் நாள் என்ன நாள் என்றால் சனிக்கிழமை 02.11.2024. நீங்கள் வசிக்கும பகுதியில் அரசாங்க அதிகாரி மற்றும் வார்டு மெம்பர்கள் இருக்கிறார்கள் என்றாலும் 1/2 கிமீ தள்ளி உள்ளார்கள்.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 505/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரத்தினம் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 13.11.2025.

**முதல் விசாரணை**

1. நான் உடுமலைப்பேட்டையில் வாணி நகர மருள்பட்டி ரோட்டில் வசித்து வருகிறேன். வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். அசா.1 எனது கணவர் ஆவார். அவர் ரியல் எஸ்டேட் செய்து வருகிறார். எனக்கு ஒரு மகன்உள்ளார். அவர் பெயர் வினோத்கண்ணன். அவர் சென்னையில் பணிபுரிந்து வருகிறார். நானும் எனது கணவரும் தான் வீட்டில் உள்ளோம். போன மாதம் நவம்பர் 2 ம் தேதி காலையில் வேலை நிமித்தமாக எனது கணவர் வெளியில் சென்று விட்டார். பின்னர் 07.11.2024 ம் தேதியன்று எனது மச்சாண்டார் மகனுக்கு திருமணம் நடைபெறுவதால் அது சம்பந்தமாக முகூர்த்த கால் நடுவதற்காக 1.45 மணிக்கு வீட்டை பூட்டியும் கேட்டையும் பூட்டியும் மச்சாண்டார் வீடான வாய்க்கால்பாலம் கணேசபுரத்திற்கு சென்று விட்டேன். எனது கணவர் 3.00 மணியளவில் வீட்டிற்கு வந்தார் கேட்டை திறந்து வீட்டிற்கு வந்த போது எனது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு லேசாக திறந்து நிலையில் இருந்தது. உடனடியாக எனது கணவர் எனக்கு போன் செய்து வீட்டை பூட்டிவிட்டு செல்லமாட்டாயா என்று

கேட்டார். நான் பூட்டி விட்டு தான் சென்றேன் என்று கூறினேன். அப்போது தான் இந்த தகவலை சொன்னார். தகவல் சொன்னதும் வீட்டிற்கு வந்தேன். வீட்டிற்குள் சென்று போய் பார்த்த போது பெட்ரூம் கதவு திறந்து கிடந்தது. வாட்ரோப் மற்றும் பீரோ உடைக்கப்பட்டு திறந்து கிடந்தது. இரும்பு பீரோவும் திறந்து கிடந்தது. அதிலிருந்த லாக்கரும் திறந்து கிடந்தது. துணிகளும் சிதறி கிடந்தது.

3. பின்னர் வாட்ரோப் பீரோவில் டிராவில் வைத்திருந்த 6 பவுன் முறுக்கு செயின் –1, தங்க நெக்லஸ் – 4 பவுன்–1, 4 பவுன் ஆரம்–1, 1 ¼ பவுன் பிரேஸ்லெட் –1, 1 ½ பவுன் வெள்ளை கல் பொறித்த ஜிமிக்கி கம்மல் – 2 ஜோடி, மூக்குத்தி அல்லகாது கம்மல் மோதிரம் போன்ற சிறு சிறு நகைகள் 1 ½ பவுன், மொத்தம் 18 ¼ பவுன் தங்க நகைகள் திருடு போயிருந்தது.தேடிப்பார்த்தும் கிடைக்கவிலலை. யாரோ உடைத்து திருடியதாக தெரிந்து கொண்டு அன்றைய தினமே காவல் நிலையம் சென்று எனது கணவர் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்.
4. இன்னும் நிறைய 2 கட்டை பையில், டைட்டன் வாட்ச், வெள்ளி குங்குமசிமிழ், லைசன்ஸ் கார்டு, என அனைத்தையும் எடுத்து கொண்டு சென்று விட்டார்கள் என்று சாட்சி அழுது கொண்டே சொன்னார். கைரேகை நிபுணர்கள் வந்து சென்ற பிறகு நான் உள்ளே சென்று பார்த்த பிறகு தான் தெரிந்தது. 4 பவுன் தான் ஆரம் –1 தான் கிடைத்ததாக சொன்னார்கள். அதை நீதிமன்றத்தின் மூலம் மனு தாக்கல் செய்து பெற்று கொண்டோம்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. உங்களுக்கு இவர்கள் தான் திருடினார்கள் என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 18 ¼ பவுன் திருடியதாக சொல்லியுள்ள நிலையில அதன் ரசீது உள்ளது என்றால் அது பற்றி என் கணவருக்கு தான் தெரியும். சம்பவம் நடந்தது எப்போது என்று உங்களுக்கு தெரியாது என்றால் 3.30 மணிக்கு எனது கணவர் வந்த போது தான் தெரியும்.புகார் கொடுக்க உடன் காவல் நிலையம் சென்றிர்களா என்றால் நான் செல்லவில்லை அப்போது நான் மயக்கம் போட்டு விழுந்து விட்டேன்.
2. உங்களை போலிசார் அதன் பின்னிட்டு வந்து விசாரித்தார்கள் அடுத்தடுத்த இரண்டு நாட்கள் வந்து வீட்டில் வைத்து விசாரித்தார்கள். கதவு உடைக்கப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் உடைந்த பொருட்களை போலிசார் எடுத்து சென்றார்களா என்றால் அது பற்றி தெரியாது.
3. சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை

என்றாலும் உண்மையில் சம்பவம் நடைபெற்றிருந்தால் புகார் அளிக்க உடன் காவல் நிலையம் சென்றிருப்பிர்கள் என்றாலும் நடக்காததால் தான் காவல் நிலயம் செல்லவில்லை என்றாலும் உண்மையில் போலிசார் விசாரிந்திருந்தால் நீங்கள் போலிசார் விசாரித்த தேதிகள் சொல்ல இயலவில்லை என்றாலும் சம்பவம் நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.